கழகம் ஆட்சியிலே உள்ளவரைதான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தமிழகத்திலே உள்ளவரைதான் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பு. மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடும், மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நல்லாசியோடும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒன்றுபட்டு வருகின்ற சட்டமன்ற தேர்தலைச் சந்தித்து, வெற்றிக் கனியை மீண்டும் பறித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோருடைய கரங்களில் ஒப்படைப்போம் என்று இந்த நேரத்தில் உறுதி எடுத்துக்கொள்வோம். இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26–2–2021), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

6. 2021–2022 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை மற்றும் 67 (59 புத்தகங்கள்).

7. 2021–2022 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

2021 பிப்ரவரி 25]

8. 2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

9. 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு. (பகுதி–I)

10. 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

11. 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

12. 2021–2022 ஆம் ஆண்டிற்கான 'உடனடிச் செலவுக்கான' மானிய அனுமதி.

13. 2021–2022 ஆம் ஆண்டிற்கான 'உடனடிச் செலவுக்கான' மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

14. 2021–2022 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY